



Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு சங்கராச்சாரியார் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மகாசன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்தர் மஹாஸ்வாமிஜி அவர்களின் 75வது வர்த்தந்தி



வஜ்ரோஸ்தவ பாரதீ
சிறப்பு இதழ் 1

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)


## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை




தனக்கு நல்லதெது என்பதைத் தெரிந்துகொள்ள மனிதன் எப்பொழுதும் ஆவலுடன் இருக்கவேண்டும். அவனுக்கு ச்ரேயோ மார்க்கத்தை எடுத்துக்கூற சாஸ்த்ரங்கள், இதிஹாஸ புராணங்கள் எல்லாம் இருக்கின்றன. இக்காலத்தில் அவற்றைத் தானாகவே படித்துத் தெரிந்துகொள்வது அவ்வளவு எளிதல்ல. நேரமும் கிடைப்பதில்லை, ஆகையால் பெரியோர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக சாஸ்த்ரத்திலுள்ள ஸூக்ஷ்ம விஷயங்களைத் தெரிந்து கொள்வதுதான் நல்லது.


தீவிரமான கடவுள் நம்பிக்கை இருந்தால் விரையில் கடவுளே அவனுக்கு ஞான குருவாக வந்து ச்ரேயோ மார்க்கத்தை அருளுவார். அப்பொழுது அவன் உலகத்தை ஒரு கனவு போல் உணர ஆரம்பித்துவிடுவான். கர்மாக்கள், அதன் பலன்கள், அவற்றை அனுபவிப்பதற்கான புனர்ஜன்மங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு விடுவான். குரு மூலமாக ஸூக்ஷ்மமான வேதாந்த விஷயங்களை படிப்படியாக அவனால் அனுபவத்திற்குக் கொண்டுவர முடியும். ஆனால், அதுபோன்ற ஜிஞாஸு (அறிந்துகொள்ள ஆவலுள்ளவன் முதலில் தன்னை குருவின் அனுக்ரஹத்திற்கு பாத்திரமாக்கிக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக ஸூரிய கிரணத்தால் நிஜமான தாமரை மொட்டுத்தான் விகஸிக்கும். கட்டை அல்லது கல்லானான தாமரை மொட்டல்ல. அதேபோல் தீவிரமான குருபக்தியால் குருஸேவை செய்து வந்து குருவின் அனுக்ரஹத்திற்கு பாத்திரமானவனில் தான் ஆத்மபோதம் உதயமாகும் அனுபவத்திற்கும் வரும்.



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)


An Unit of the e magazine Voice of Jagadguru)

यद्यभ्युदयने पानोर्यया पद्मम् प्रकाशते । न काशन्ते तथा पद्मा: काष्टपाषाणामृण्मया: ॥
प्रकाशको रविर्यद्वत्पद्ममेव विकासयेत् । गुरुस्तथा बोधक: सच्छिश्यमेव प्रबोधयेत् ॥

யத்3யப்4யுத3யனே பானோர்யயா பத்3மம் ப்ரகாஶதே .
ந காஶந்தே ததா2 பத்3மா: காஷ்டபாஷாணாம்ரு’ண்மயா: ..
ப்ரகாஶகோ ரவிர்யத்3வத்பத்3மமேவ விகாஸயேத் .
கு3ருஸ்ததா2 போ3த4க: ஸச்சி2ஶ்யமேவ ப்ரபோ3த4யேத் ..

இதை நன்றாகப் புரிந்துகொண்டு குருவின் அனுக்ரஹத்திற்கு பாத்திரராக வேண்டுமென்று எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.

### ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



மனிதன் எப்பொழுதும் பகவானிடம் "உலகத்தில் எல்லோரும் சௌக்கியமாக இருக்கவேண்டும்" என்று ப்ரார்த்தனை செய்யவேண்டும். யார் மேலேயும் த்வேஷ பாவத்துடன் இருக்கக்கூடாது. பிறர் தனக்கு ஏதாவது தப்பு செய்தாலும், மன்னிக்கக்கூடிய மனப்பான்மை இருக்க வேண்டும். ப்ரதிஹிம்ஸை செய்யும் எண்ணம் ஒருநாளும் வரக்கூடாது. இதுதான் ஸத்புருஷனுடைய லக்ஷணம். யார் பிறருக்கு கஷ்டம் கொடுக்க விரும்புவானோ அக்கஷ்டம் அவனுக்கே தான் திரும்பவரும். சுவரில் எறிந்த பந்து, எறிந்தவன் மீதே திரும்பி விழுவதைப் போல்வரும்.

कन्दुकोभित्रिनिक्षिप्त इव प्रतिफलन्मुहुः । आपतत्यात्मनि प्रत्यो दोषोऽन्यस्य चिकीर्षतः ॥ கந்து3கோபி4த்ரிநிக்ஷிப்த இவ ப்ரதிப2லன்முஹுः । ஆபதத்யாத்மனி ப்ரத்யோ தோ3ஷோ(அ)ன்யஸ்ய சிகீர்ஷதः ॥

இதைப்புரிந்து கொள்ளாமல் சிலர் பிறருக்கு எப்பொழுதும் கஷ்டங்களைக் கொடுக்க துணிந்து விடுவார்கள். யாராவது ஒரு நல்ல வார்த்தை சொல்லி நிறுத்தப் பார்த்தாலும் கேட்கமாட்டார்கள். துரியோதனன் யாருடைய நல்ல வார்த்தைகளையும் எடுத்துக் கொள்ளவில்லை. பாண்டவர்கள் மீது எல்லாவித துன்பங்களையும் கொடுத்து வந்தான். ஒரு நாளும் அவன் பண்ணின தவறுகளுக்கு பச்சாத்தாபமும் படவில்லை. மேலும் மேலும் செய்த கர்மங்கள் கடைசியில் அவனை அழித்துவிட்டது. ஆகையால் யாரும் பிறருக்கு தீங்கு நினைக்கக் கூடாது. அப்படி ஏதாவது தீங்கு செய்தாலும் உடனே மன்னிப்பு கேட்டு

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)


An Unit of the e magazine Voice of Jagadguru)

அந்தத் தவறு திரும்பவும் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். யார் ஒருவன் தவறுகளையும் செய்து, பச்சாத்தாபமும் படாமல், மேலுக்கு மேல் அதே தவறுகளை செய்து வருவானோ அவன் கர்மங்கள் அவனை ஆழம் தெரியாத குழியில் நள்ளிவிடும்.

यस्तु पूर्वकृतं पापमविमृश्यानुवर्तते ।अगाधपङ्के दुर्मेधा विषमे विनिपात्यते ।। யஸ்து பூர்வக்ரு’தம்’ பாபமவிம்ருஶ்யானுவர்ததே .அகா³த⁴பங்கே து³ர்மைதா⁴ விஷமே விநிபாத்யதே ..

இதை நன்றாக புரிந்து கொண்டு நல்லபடியாக வாழ்க்கை நடத்த ஆசிர்வதிக்கிறோம்.

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



பல ஸூக்ஷ்ம விஷயங்களை சாஸ்த்ரங்கள் மனிதனுக்குப் போதிக்கின்றன. ஸூக்ஷ்ம விஷயங்கள் என்றால் மனிதன் புத்திக்கு சீக்கிரமாக எட்டாத விஷயங்கள். அந்த விஷயங்கள் ஒருவனுக்கு மிகச் சாதாரணமாகக்கூடத் தோன்றலாம்.

சில விஷயங்களை மறந்துபோகும் வாய்ப்புக்களும் இருக்கின்றன. உதாரணமாக, ஒருவனுக்குக் கோபம் வரும் பொழுதோ அல்லது அவனுக்குப் பிடிக்காதது ஏதாவது நடந்துவிட்டாலோ உடவே வேறு ஒருவன் மேல் பழிபோட ஆரம்பித்துவிடுவான். மேலும் போக்கூடாத வார்த்தைகளால் திட்டிவிடுவான். கோபம் தணிந்ததும் தான் அப்படித் திட்டியிருக்கக்கூடாது என்று புரியவரும். ஆனால் அதற்கு முன்பே சொல்லம்புகளாய் தாக்கப்பட்டவன் மனதில் அந்த வார்த்தைகள் மிகவும் ஆழமாகப் பதிந்து இதயத்தையே உடைந்துவிடும். அவன் இரவும் பகலும் வருத்திக்கொண்டே இருப்பான். ஆகையால் ஒருவரும் மற்றவரை சுடுஞ்சொற்களால் புண்படுத்தக்கூடாது.

वाक्सायका वदनान्निष्पतन्ति यैराहतश्शोचति रात्र्यहानि।
परस्य नामर्मसु ते पतन्ति तान् पण्डिती नावसृजेत् परेभ्यः।।
வாக்ஸாயகா வத³னாந்நிஷ்பதந்தி யைராஹதஶ்ஶோசதி ராத்ர்யஹானி|
பரஸ்ய நாமர்மஸு தே பதந்தி தான் பண்டி³தீ நாவஸ்ரு’ஜேத் பரேப்⁴ய: |\

பாணத்தால் அடிபட்டவனின் புண்கூட விரைவில் ஆறிவிடும். அதேபோல் கோடாலியால் வெட்டப்பட்ட காட்டுமரமும் திரும்ப வளர ஆரம்பித்துவிடும். ஆனால் கடுஞ்சொற்களால் உண்டாகும் புண் ஆறாது. மனிதனுக்கு எந்த ஸந்தர்பத்திலும் வாக்சுத்தி இருக்கவேண்டும் என்று சாஸ்த்ரம் போதிக்கிறது.

रोहते सायकैर्विद्धं वनं परशुना हतम्।
चाचा दुरुक्तं बीभत्सं न संरोहति वाक्षतम्।
ரோஹதே ஸாயகைர்வித்³த⁴ம்’ வனம்’ பரஶுனா ஹதம் |
சாசா து³ருக்தம்’ பீ³ப⁴த்ஸம்’ ந ஸம்’ரோஹதி வாக்ஷதம் ||

இதை நன்றாகப் புரிந்துகொண்டு ஒருவர் மற்றொருவரை எந்தவிதத்திலும் புண்படுத்தாமல் இருக்கவேண்டும் என்று கூறி எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

கடவுள் சாஸ்வதமானவர். நேற்றும், இன்றும், நாளையும் ஒன்றுபோல் மாற்றமில்லாமல் இருப்பவர். எல்லா இடங்களிலும் இருப்பவர்.

ईशानो भूतभव्यस्य स एवाद्य उ श्वः।
ஈஶானோ பூ⁴தப⁴வ்யஸ்ய ஸ ஏவாத்³ய உ ஶ்ய:.

ஒவ்வொரு மனிதனும் அவர் மேல் பக்தி வைத்து, கீதை போன்ற சாஸ்த்ரங்களில் அவர் காட்டிய வழியில் வாழ்வதுதான் நல்லது, அவரைப் பல உருவங்களில் பூஜிக்கலாம். எல்லா உருவங்களும் அவருடையதுதான். அவர் பக்தனின் பக்தி விசேஷத்தைப் பொறுத்து அருளுகிறார்.

எல்லா இடங்களிலும் வ்யாபித்திருக்கின்ற கடவுளை கோயிலில் மட்டுமே எதற்காக பூஜிக்கவேண்டும்? அவர் கோயிலில் மட்டுந்தான் தோன்றுவாரா?' என்று சிலருக்கு ஸந்தேஹமுண்டாகலாம்.

கடவுள் எல்லா இடங்களிலும் நிறைந்திருந்தாலும் அவருடைய ப்ரபாவம், ஸான்னித்யம் ஆகியவை கோயிலிலுள்ள விக்ரஹத்திற்கு விசேஷமாக உள்ளது. கும்பாபிஷேகத்திற்குப் பிறகு பக்தனின் பக்தியை ஏற்றுக்கொள்ளும் சக்தி அந்த

விக்ரஹத்திற்கு வந்துவிடுகிறது அதனால் அவர் மகிழ்ச்சியடைந்து பக்தனுக்கு அருள்பாலிக்கிறார். என்பதே இதற்கான பதில்.

இதைத்தான் ஸ்ரீஆதிசங்கரபகவத்பாதர் தமது பாஷ்யத்தில் सर्वगतोऽपिश्वरस्तत्रोपास्यमान: प्रसीदति । सर्वगतस्यापि ब्रह्मण उपासनार्थ: प्रदेशविशेषपरिग्र हो न विरुध्यते ।ஸர்வக3தோ(அ)பிஸ்வரஸ்தத்ரோபாஸ்யமான: ப்ரஸீத3தி |
ஸர்வக3தஸ்யாபி ப்3ரஹ்மண உபாஸனார்த2: ப்ரதே3ஶவிஶேஷபரிக்3ர ஹோ ந விருத்4யதே | என்று பல இடங்களில் விவரித்துள்ளார்.



ஆகையால் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கும் கடவுளை கோயிலில் வழிபடுவதில் தவறேதுமில்லை. மேலும்,

अर्चादानर्चयेत्तावदीश्वरं मां स्वकर्मकृत्।
यावन्नचेद स्वहदि सर्वभूतेष्ववस्थितम् ।।

அர்சாதா3னர்சயேத்தாவதீ3ஶ்வரம்’ மாம்’ ஸ்வகர்மக்ரு’த்.
யாவன்னசேத3 ஸ்வஹ்ருதி3 ஸர்வபூ4தேஷ்வவஸ்தி2தம் ..

என்று பகவானே பாகவதத்தில் கூறியுள்ளார்.

அதாவது, எல்லா ப்ராணிகளிலும் இருக்கும் என்னை எதுவரை ஒருவன் தனது ஹ்ருதயத்தில் உணரவில்லையோ அதுவரை தனது கர்மாக்களை அனுஷ்டித்துக்கொண்டு ஈச்வரனான என்னை விக்ரஹம் போன்றவற்றில் அவகாசத்திற்கேற்றபடி பூஜிக்கவேண்டும் என்று பகவான் கூறியுள்ளார்.

இதை நன்றாகப் புரிந்துகொண்டு உருவமற்ற ஈச்வரனை உருவ வடிவத்தில் பூஜை செய்து அவரது அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாக வேண்டும் என்று ஆசீர்வதிக்கிறோம்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

தர்ம சாஸ்த்ரம், அர்த்த சாஸ்த்ரம், சக்தி தந்த்ர சாஸ்த்ரம், சிற்ப சாஸ்த்ரம் போன்ற அனேக சாஸ்த்ரங்கள் இருக்கின்றன. ஸாங்க்யம், நியாயம், வைசேஷிகம், யோகம், மீமாம்ஸை, வேதாந்தம் ஆகிய தர்சனங்களும் இருக்கின்றன. இவை அனைத்தையும் படித்துத் தெரிந்து கொள்வதற்கு வாழ்நாள் காலம் முழுவதும் போதாது. நிறையத் தடைகளும் வரும். ஆகையால், தண்ணீர் கலந்த பாலிலிருந்து பாலை மட்டும் பிரித்து உறிஞ்சும் ஹம்ஸ பக்ஷியைப்போல், மனிதன் இந்த சாஸ்த்ரங்களின் ஸாரத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குக் குருவின் துணையை நாடவேண்டும்.




अनन्तशास्त्रं बहुवेदितव्यं अल्पश्च कालो बहरश्चविघ्नाः ।
यत्सारभूतं तदुपासितव्यं हंसो यथा क्षीरमिवाम्बुमिश्रम् ।।
அனந்தஶாஸ்த்ரம்’ ப3ஹுவேதி3தவ்யம்’ அல்பஶ்வ காலௌ ப3ஹரஶ்சவிக்4னா: .
யத்ஸாரபூ4தம்’ தது3பாஸிதவ்யம்’ ஹம்’ஸோ யதா2 க்ஷீரமிவாம்பு3மிஶ்ரம் ..

செய்யத் தகாத செயல்கள் எவை, அவ்வாறான செயல்களைச் செய்பவருக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பனவற்றைச் சட்டம் வரையறை செய்கிறது. ஆனால் அது, எதைச் செய்ய வேண்டும். எதைச் செய்தால் நல்லது. எதைச் செய்தால் புண்யம் கிட்டும் என்று கூறுவதில்லை. சாஸ்த்ரம் எதைச் செய்ய வேண்டும் என்ற விதியையும் எதைச் செய்யக்கூடாது என்ற நிஷேதத்தையும் கூறுகிறது. இம்மையிலும், மறுமையிலும் மனிதன் நன்மை அடைய வேண்டும் என்பதை உத்தேசித்தே சாஸ்த்ரங்கள் விதி. நிஷேதங்களைக் கூறுகின்றன.

உண்மை அறிந்த முனிவர்கள், இதற்கான உபாயங்களை வகுத்து அனுஷ்டித்தும் வந்துள்ளனர். முன்னோர் காண்பித்த அந்த உபாயங்களை எவன் ஊக்கத்துடன் அனுஷ்டிக்கிறானோ அவன் நல்ல பலன்களை அடைகிறான்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

अस्मिन्लोके ऽथवामुष्मिन्मुनिभिस्तत्वदर्शिभिः ।
दृष्टा योगाः प्रयुक्ताश्च पुंसां श्रेयः प्रसिद्धये ।।
तानातिष्ठति यः सम्यगुपायान्पूर्वदर्शितान् ।
अवरः श्रद्धयोपेत उपेयान्विन्दते ऽब्जसा ।।
அஸ்மின்லோகே (அ)த2வாமுஷ்மின்முனிபி4ஸ்தத்வத3ர்ஶிபி4: |
த்3ரு’ஷ்டா யோகா3: ப்ரயுக்தாஶ்ச பும்’ஸாம்’ ஶ்ரேய: ப்ரஸித்3த4யே ||
தானாதிஷ்ட2தி ய: ஸம்யகு3பாயான்பூர்வத3ர்ஶிதான் |
அவர: ஶ்ரத்3த4யோபேத உபேயான்விந்த3தே (அ)ப்3ஜஸா ||

சான்றோரின் வார்த்தைகளை மதிக்காமல் தன் இஷ்டப்படி வாழ்க்கை நடத்துபவன் துக்கத்தை அனுபவிப்பான். ஆகையால், அனைவரும் பகவத்கீதை, மனுஸ்ம்ருதி போன்ற க்ரந்தங்களில் கூறியுள்ளனவற்றை ஓரளவாவது பின்பற்றி வாழ்க்கை நடத்தி ச்ரேயஸை அடைய வேண்டும்.

### ஶ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஶ்ரீஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



ஒருவனுடைய பந்தத்திற்கும், மோக்ஷத்திற்கும் காரணமாக அமைவது அவனுடைய மனம் தான். லௌகிக விஷயங்களில் பற்று வைப்பது பந்தத்திற்கும், பரமேச்வரனிடம் பற்றுதல் வைப்பது மோக்ஷத்திற்கும் காரணமாகிறது.

चेतः खल्वस्य बन्धाय मुक्तये चान्मनो मतम् ।
गुणेषु सक्तं बन्धाय रतं या पुंसि मुक्कमे ।।
சேத: க2ல்வஸ்ய ப3ந்தா4ய முக்தயே சான்மனோ மதம் .
கு3ணேஷு ஸக்தம்’ ப3ந்தா4ய ரதம்’ யா பும்’ஸி முக்கமே ..

மனிதன் ஒரு பொருளைப் பார்க்கும்பொழுது அதனிடத்தில் அவனுக்கு ஆசை உண்டாகிறது. அது பேராசையாக மாறுகிறது. அந்தப் பொருளை உடனே அடைவதற்கு அவன் முயற்சி செய்கிறான். சரியான வழியில் அதை அடைய முடியவில்லை என்றால் தவறான வழியில் அடைய முயற்சிக்கிறான். இவற்றிற்கு வசப்பட்ட மனிதனின் கதி அதோ கதியாகிவிடுகிறது. மனிதன் தான்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

செய்த கர்மத்திற்கேற்றவாறு பலனை அடைகிறான். அவ்வாறு அடையும் பலன் அவனை மீண்டும் முயற்சி செய்யத் தூண்டுகிறது. இவ்வாறு இந்தச் சக்கரத்தில் மனிதன் மாட்டிக்கொண்டு விடுகிறான். இந்த பந்தத்திலிருந்து விடுதலை பெறுவது தான் மோக்ஷம் என்று கூறப்படுகிறது. மனதை அடக்கி ஈச்வரனின் மேல் பற்றை வளர்ப்பதால் தான் அது ஸித்திக்கும்.

अत एव शनैश्चित्तं प्रसक्तमसतां पथि ।
भक्ति योगेन तीव्रेण विरक्त्या च नयेद्वशम् ।।
அத ஏவ ஶனைஶ்சித்தம்’ ப்ரஸக்தமஸதாம்’ பதி$^2$ .
ப$^4$க்தி யோகே$^3$ன தீவ்ரேண விரக்த்யா ச நயேத்$^3$வஶம் ..

அதாவது, இந்த்ரியங்களின் வசப்பட்டு தீய வழியில் சென்ற மனதை தீவ்ரமான பக்தி யோகத்தாலும், வைராக்யத்தாலும் மெல்ல மெல்ல தன் வசத்தில் கொண்டு வரவேண்டும். கடவுள்: மேல் பற்றுதல் என்றால் அவர் மேல் பக்தி, அன்பு, ச்ரத்தை, அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க வேண்டும். இதனால் மனம் சுத்தமடைந்து கடவுளில் லயமாகிறது. ஆகையால் மனிதன் கடவுள் பக்தியைப் ப்ரதானமாக ஏற்றுக்கொண்டு தனக்கு விதிக்கப்பட்டுள்ள கர்மாக்களை ஈச்வரார்ப்பண புத்தியோடு செய்து வந்தால் கடவுளின் ப்ரீதிக்குக் காரணமாகிவிடுவான். இதுதான் ச்ரேயோ மார்கம்.

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



எப்பொழுதும் தனக்கு நல்லதே நடக்க வேண்டும், நல்லதே கிடைக்க வேண்டும் என்று மனிதன் எண்ணுகிறான். அவன் அதுபோல் எண்ணுவது நியாயந்தான். அதற்காக அவன் பல செயல்களையும் செய்துகொண்டிருக்கிறான். அதன் பலன்களையும் ஜன்மஜன்மமாக அனுபவித்துக்கொண்டு வருகிறான் (ஞானம் வரும் வரை).

ஆனால் இக்காலத்தில், நல்ல செயல்களைச் செய்துகொண்டு வரும் தங்களுக்கு பலன் கிடைக்குமா என்று ஒரு சிலருக்கு ஸந்தேஹம் வருகிறது. நிச்சயமாகப் பலன் கிடைக்கும் என்று தான் சாஸ்த்ரம் கூறுகிறது. எந்தச் செயலுக்கும் அதற்கான பலன் உண்டு. நல்ல செயல்களுக்கு நல்ல பலனும், கெட்ட செயல்களுக்கு கெட்ட பலனும் உண்டாகும். இதில் ஸந்தேஹமே

வேண்டாம். அதனால்தான், மனிதனின் நலனை உத்தேசித்து 'நல்ல செயல்களையே செய். உனக்கு இஹத்திலும் பரத்திலும் நல்ல பலனே கிடைக்கும்' என்று சாஸ்த்ரம் உபதேசிக்கிறது.

यथा धेनुराहस्रेषु वत्यो बिन्दति मातरम् ।
तथा पूर्वकृतं कर्म कर्तारमनुगच्छति ।।
யதா$^2$ தே$^4$னுராஹஸ்ரேஷு வத்யோ பி$^3$ந்த$^3$தி மாதரம் |
ததா$^2$ பூர்வக்ரு'தம்' கர்ம கர்தாரமனுக$^3$ச்ச$^2$தி ||

அதாவது, ஆயிரம் பசுக்களுக்கு நடுவில் தன் தாய்ப் பசு போய்க்கொண்டிருந்தாலும் கன்றுக்குட்டி தன் அம்மாவைத் தொடர்ந்து போய்க்கொண்டிருக்கும். அதேபோல் ஒருவன் ஏற்கனவே செய்த செயல்கள் அவனைப் பின்தொடர்ந்து கொண்டே இருக்கும். ஆகையால், செயல்களுக்கான பலனும் நிச்சயமாகக் கிடைக்கும்.

कुशलान्याशु सिद्धयन्ति नेतराणि कृतानि यत् ।
குஶலான்யாஶு ஸித்$^3$த$^4$யந்தி நேதராணி க்ரு'தானி யத் .

சொல்லப் போனால் புண்யச் செயல்களுக்கு சீக்ரமாகவே பலன் கிடைக்கிறது. கெட்ட செயல்கள் மெதுவாகக் கெட்ட பலனைக் கொடுத்து அந்தச் செயல் செய்தவனை அழித்துவிடுகிறது. இதை நன்றாகப் புரிந்துகொண்டு நல்ல செயல்களையே செய்ய வேண்டும் என்று கூறி எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

மனிதன் எப்பொழுதும் ஏதாவது ஒரு செயலைச் செய்துகொண்டேதான் இருப்பான். ஒரு செயலும் செய்யாமல் அவனால் சும்மா இருக்க முடியாது. ப்ரக்ருதி (இயற்கை) குணங்களுக்கு வசப்பட்டு அவன் மூலமாக ஏதாவது செயல்கள் நடந்துகொண்டே இருக்கும்.


न हि कश्चित् क्षणमपि जातु तिष्ठत्य कर्मकृत् ।
कार्यत ह्ययश: कर्म सर्व: प्रकृति जैर्गुणै: ।
ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்ட$^2$த்ய கர்மக்ரு'த் |
கார்யத ஹ்யயஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ரு'தி ஜைர்கு$^3$ணை: ||

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

அந்தச் செயல்களை எப்படிச் செய்தால் நன்மையுண்டாகும். என்று சிந்தித்து அவன் செயல்பட வேண்டும். அதற்கு ஸத்ஸங்கம் (நல்லோர்களின் ஸஹவாஸம்) மிகவும் தேவை. நல்லோர்கள் ஸஹவாஸத்திலிருந்தால் புத்தியும் மனதும் தெளிவாக இருக்கும். மனதில் நல்ல சிந்தனைகளே உண்டாகும். நல்ல செயலையே செய்யத் தோன்றும். கெட்ட ஸஹவாஸம் கெட்ட செயல்களுக்குக் காரணமாகி மனிதனுக்கு மேன்மேலும் துன்பத்தையே அளிக்கும்.

सङ्गो यः संमृतेर्हेतुरसत्सु निहितोऽधिया ।
स एव साधुषु कृतो निःसङ्गत्वाय कल्पते ।।
ஸங்கோ3 ய: ஸம்'ம்ரு'தேர்ஹேதுரஸத்ஸு நிஹிதோ(அ)தி4யா |
ஸ ஏவ ஸாது4ஷு க்ரு'தோ நி:ஸங்க3த்வாய கல்பதே ||



சில சமயங்களில் நல்லவனுக்குக்கூட, 'இப்படிச் செய்தால் நல்லதா? அப்படிச் செய்தால் நல்லதா? என்ற குழப்பம் உண்டாகும். அப்பொழுது தன்னுடைய குருவிடம் அறிவுரை பெற்று அதன்படி நடக்கவேண்டும். இக்காலத்தில் பலரும் இதைக் குறித்து சிந்தனை செய்யாமல், நல்லது கெட்டதைப் புரிந்து கொள்ளாமல், கெட்ட ஸஹவாஸத்தில் சிக்கித் தவிக்கிறார்கள், யாருடைய செயலானது தர்மத்திற்காக, வைராக்யத்திற்காக (நிஷ்காம கர்மம் மூலமாக), பகவானின் திருவடிகளை ஸேவிப்பதற்காக, அமைவதில்லையோ, அவன் உயிருடன் இருந்தாலும் அவனை இறந்தவனாகத்தான் எண்ணவேண்டும் என்று, சாஸ்த்ரம் கூறுகிறது.

नेह यत्कर्मधर्माय न विरागाय कल्पते।
न तीर्थपदसेवायै जीवन्नपि मृतो हि सः ।।
நேஹ யத்கர்மத4ர்மாய ந விராகா3ய கல்பதே |
ந தீர்த2பத3ஸேவாயை ஜீவன்னபி ம்ரு'தோ ஹி ஸ: ||

ஆகையால், அனைவரும் நல்லோர்களின் ஸஹவாஸத்திலேயே இருந்துவர வேண்டும் என்று கூறி எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஶ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஶ்ரீஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

கடவுள் சாஸ்வதமானவர், நேற்றும், இன்றும், நாளையும் ஒன்றுபோல் மாற்றமில்லாமல் இருப்பவர். எல்லா இடங்களிலும் இருப்பவர்.

ईशानो भूतभव्यस्य स एवाद्य उ श्व: ஈஶானோ பூ4தப4வ்யஸ்ய ஸ ஏவாத்3ய உ ஶ்வ:



ஒவ்வொரு மனிதனும் அவர் மேல் பக்தி வைத்து, கீதை போன்ற சாஸ்த்ரங்களில் அவர் காட்டிய வழியில் வாழ்வதுதான் நல்லது. அவரைப் பல உருவங்களில் பூஜிக்கலாம். எல்லா உருவங்களும் அவருடையதுதான். அவர்

பக்தனின் பக்தி விசேஷத்தைப் பொறுத் அருளுகிறார். எல்லா இடங்களிலும் வ்யாபித்திருக்கின்ற கடவுளை கோயிலில் மட்டுமே எதற்காக பூஜிக்கவேண்டும்? அவர் கோயிலில் மட்டும் தான் தோன்றுவாரா?' என்று சிலருக்கு ஸந்தேஹமுண்டாகலாம்.

கடவுள் எல்லா இடங்களிலும் நிறைத்திருந்தாலும் அவருடைய ப்ரபாவம். ஸான்னித்யம் ஆகியவை கோயிலிலுள்ள விக்ரஹத்திற்கு விசேஷமாக உள்ளது. கும்பாபிஷேகத்திற்குப் பிறகு பக்தனின் பக்தியை ஏற்றுக்கொள்ளும் சக்தி அந்த விக்ரஹத்திற்கு வந்துவிடுகிறது அதனால் அவர் மகிழ்ச்சியடைந்து பக்தனுக்கு அருள்பாலிக்கிறார் என்பதே இதற்கான பதில்.

இதைத்தான் ஸ்ரீஆதிசங்கரபகவத்பாதர் தமது பாஷ்யத்தில் सर्वगतोऽपीश्वरस्तत्रोपास्यमान: प्रसीदति । ஸர்வக$^{3}$தோ(அ)பீஶ்வரஸ்தத்ரோபாஸ்யமான: ப்ரஸீத$^{3}$தி . सर्वगतस्यापि ब्रह्मण उपासनार्थ: प्रदेशविशेषपरिग्रहो न विरुध्यते । ஸர்வக$^{3}$தஸ்யாபி ப$^{3}$ரஹ்மண உபாஸனார்த$^{2}$: ப்ரதே$^{3}$ஶவிஶேஷபரிக்$^{3}$ரஹோ ந விருத்$^{4}$யதே . என்று பல இடங்களில் விவரித்துள்ளார். ஆகையால் எல்லா இடங்களிலும் நிறைத்திருக்கும் கடவுளை கோயிலில் வழிபடுவதில் தவறேதுமில்லை. மேலும்,

अर्चादावर्चयेत्तावदीश्वरं मां स्वकर्मकृत् ।
यावन्नवेद स्वहृदि सर्वभूतेष्ववस्थितम् ॥
அர்சாதா$^{3}$வர்சயேத்தாவதீ$^{3}$ஶ்வரம்’ மாம்’ ஸ்வகர்மக்ரு’த் .
யாவன்னவேத$^{3}$ ஸ்வஹ்ரு’தி$^{3}$ ஸர்வபூ$^{4}$தேஷ்வவஸ்தி$^{2}$தம் ..

என்று பகவானே பாகவதத்தில் கூறியுள்ளார்.

அதாவது, எல்லா ப்ராணிகளிலும் இருக்கும் என்னை எதுவரை ஒருவன் தனது ஹ்ருதயத்தில் உணரவில்லையோ அதுவரை தனது கர்மாக்களை அனுஷ்டித்துக்கொண்டு ஈச்வரனான என்னை விக்ரஹம் போன்றவற்றில் அவகாசத்திற்கேற்றபடி பூஜிக்கவேண்டும் என்று பகவான் கூறியுள்ளார். இதை நன்றாகப் புரிந்துகொண்டு உருவமற்ற ஈச்வானை உருவ வடிவத்தில் பூஜை செய்து அவரது அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகவேண்டும் என்று ஆசீர்வதிக்கிறோம்.

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்